**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.218/2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. கார்த்தி |
| Husband/Father Name | எழுமலை |
| Village /Area | கூடலூர் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 29 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.09.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போதும் சம்பவத்தின் போதும் பழைய பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 08.05.2024 அன்று காலை 06.30 மணியளவில் வடிவேல் என்பவர் சண்முகத்தை கட்டையால் தாக்கியுள்ளதாகவும், அவர்களுக்கிடையே பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்ததாகவும், அதனால் ஆஜர் எதிரி அருகில் இருந்த கட்டை எடுத்து சண்முகத்தை கட்டையால் தாக்கியதாகவும், காயம் பட்ட சண்முகம் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும், தான் சண்முகத்தை தாக்கிவிட்டு பெங்களூர் செல்லலாம் என்று பழைய பாளையம் ஏரிக்கரைக்கு வந்த போது போலீசார் வடிவேலுவை கைது செய்து எங்களை அழைத்ததன் பேரில் நானும் கிராம உதவியாளரும் பழைய பாளையம் ஏரிக்கரைக்கு சென்றோம். அங்கு வடிவேலு தானாக முன்வந்து எந்தவித வற்புறுத்தலும் இல்லாமல் என் முன்னிலையிலும்

கிராம உதவியாளர் ரவி முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி வடிவேலுக்கு மனைவி மற்றும் மகள் உள்ளார்கள் என்றும், அவர்கள் பெங்களூரில் வசிப்பதாகவும் அவருக்கு செலவிற்கு பணம் இல்லாததால் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் கடன் வாங்கியதாகவும், அதே போன்று சண்முகத்திடமும் ரூபாய் 2000/- கடனாக வாங்கியதாகவும், பிறகு இது குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் சண்முகத்தை வடிவேல் கட்டையால் தாக்கியதாகவும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் ரவி என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள். மேற்படி ஒப்பதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி அவரை அழைத்து சென்றால் அவருடைய வீட்டில் பாத்ரூமில் மறைத்து வைத்திருந்த சண்முகத்தை அடிக்க பயன்படுத்திய இரத்த கரை படிந்த கட்டையையும், இரத்த கரை படிந்த துணியையும் எடுத்து ஆஜர் படுத்துவதாக கூறியதன் அடிப்படையில் காவல் ஆய்வாளர் எதிரியையும் எங்களையும் அவர் வீட்டிற்கு அழைத்து சென்ற போது எதிரி வீட்டின் பாத்ரூமில் இருந்து எடுத்து ஆஜர் செய்த விறகு கட்டையை ஆய்வாளர் என் முன்னிலையிலும் உதவியாளர் முன்னிலையிலும் மகஜரில் கைப்பற்றிக்கொண்டார். மேலும் அதே பாத்ரூமில் இருந்து இரத்த கரை படிந்த வெள்ளை சாம்பல் நிற பச்சை கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று, இரத்த கறை படிந்த இளம் சிவப்பு கலர் வெள்ளை கோடு போட்ட வேட்டி ஒன்று, சுமார் 65 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை அதில் இரத்தக்கறை படிந்திருந்தது ஆகியவற்றறை எதிரி எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமுலத்தின்

அனுமதிக்கபட்ட பகுதி **அதசாஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரத்த கரை படிந்த வெள்ளை சாம்பல் நிற பச்சை கோடு போட்ட முழுக்கை சட்டை **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரத்த கறை படிந்த இளம் சிவப்பு கலர் வெள்ளை கோடு போட்ட வேட்டி **சா.பொ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றறுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 17:33:37 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.